முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No. 123/2021**

**Witness PW 2**

பெயர்: சந்திரசேகர்

த/பெ.: வடிவேல்

இன்று (10/03/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

வாதி பூபதி வீடு வாங்கியதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது. எந்த தேதியில் யார் கிரையம் கொடுத்தார்கள் என்றால் 2018ம் ஆண்டு கிரையம் கொடுத்தார்கள். கிரையம் கொடுத்த நபர் பெயர் ஆதிமூலம் ஆகும். ஆதிமூலம் குடிப்பழக்கம் உள்ளவரா என்றால் எனக்கு தெரியாது. எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பேசப்பட்டது. கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. கிரையம் கொடுத்த அன்றே சொத்து ஒப்படைக்கப்பட்டதா என்றால் காலி பன்னுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் காலி செய்யவில்லை. வாடகை தருவதாக சொன்னார்கள். வழக்கு சொத்தில் இன்று வரை அவரது மனைவி மக்கள் தாயார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எவ்வளவு ரூபாய் வாடகை என்று எனக்குத் தெரியாது. வாடகை கொடுத்தார்களா இல்லையா என்றும் எனக்குத் தெரியாது. மாதா மாதம் வட்டி கொடுத்தார்களா என்றால் வாடகையே கொடுக்கவில்லை. பிரதிவாதிகள் கடன் தான் பெற்றுள்ளார்கள் என்றாலும் கிரைய ஆவணம் கிடையாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் வாதியிடம் பெற்ற கடனுக்காக மாதம் தோறும் ரூ.2,000/- வட்டியாக செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதியின் பேச்சை கேட்டுக்கொண்டு நான் தவறாக கிரையம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய தேதியிலிருந்து இன்று வரை பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. வாதி பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் பதிவு செய்த நாளில் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வீட்டை காலி செய்துவிட்டு நோட்டீஸ் கொடுத்தார்கள். எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. என்னுடன் பாண்டியன் என்பவர் சாட்சி கையெழுத்துப் போட்டார். பாண்டியனை நான் பார்க்கவில்லை. அவரிடம் எந்த விவரமும் இந்த வழக்கு குறித்து கேட்டுக்கொள்ளவும் இல்லை. பிரதிவாதிகள் ஒருபோதும் வழக்கு சொத்திலிருந்து காலி செய்யவில்லை என்றாலும் காலி செய்ததாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பாண்டியன் வந்து சாட்சி சொன்னால் அது உண்மைதான். நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-C.R.Gowthaman)
Principal Subordinate Judge ,
Villupuram.